முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 18-07-2024

# வாடிய வயிரைக் கண்ட போதெல்லாம்....

‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்’ என்று பாடினார் அருட்திரு வள்ளலார். வாடிய வயிரைக் கண்டபோதெல்லாம் வாடி பசிப் பிணி தீர்த்து வருகிறார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

தமிழ்நாட்டில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் காலை உணவுத் திட்டத்தை பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் தேதியன்று - 2022 ஆம் ஆண்டு மதுரையில் வைத்து தொடக்கி வைத்தார்கள். இந்த திட்டத்தின் கீழ் ஆயிரத்து 545 பள்ளிகளைச் சேர்ந்த 1 லட்சத்து 14 ஆயிரம் குழந்தைகளுக்கு தினமும் காலையில் பள்ளியில் வைத்து உணவு வழங்கப்பட்டது.

பள்ளிக் குழந்தைகளுக்கு இது மிகமிக ஊக்கமளிக்கக் கூடிய திட்டமாக அமைந்திருந்ததால் இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தர விட்டார்கள். 30 ஆயிரத்து 992 அரசு தொடக்கப் பள்ளிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த திருவாரூரில் நடைபெற்ற விழாவில் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார் முதலமைச்சர் அவர்கள். இதன் மூலமாக 18 லட்சத்து 50 மாணவ, மாணவியர் காலை உணவு உண்டு வருகிறார்கள்.

**இதுவரை காலை உணவு வழங்கப்பட்டது அனைத்தும் அரசுப் பள்ளி மாணவ, மாணவியருக்கு மட்டும்தான். அரசு உதவி பெறும் பள்ளிகளும் இதே கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சரிடம் வைத்தார்கள். அதனையும் முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டு இத்திட்டத்தை அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த உத்தரவிட்டார்கள். 3 ஆயிரத்து 995 அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் 2 லட்சத்து 23 ஆயிரத்து 536 பிள்ளைகள் இத்திட்டத்தின் கீழ் காலை உணவுத் திட்டத்தில் சேர்ந்துள்ளார்கள். பெருந்தலைவர் காமராசர் பிறந்த ஜூலை 15 ஆம் நாள் இத்திட்டத்தை திருவள்ளூரில் தொடங்கி வைத்தார் முதலமைச்சர். மாணவ, மாணவியருடன் உண்டு உரையாடினார் முதலமைச்சர் அவர்கள்.**

மொத்தமாகச் சொல்வதாக இருந்தால் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் படி தினந்தோறும் 20 லட்சத்து 73 ஆயிரம் மாணவ, மாணவியர் காலை உணவுத் திட்டத்தில் இணைந்து தினந்தோறும் வயிறார உண்ட பிறகு பாடங்களைக் கவனிக்கப் போகிறார்கள்.

**காலை உணவு சாப்பிட்ட பிள்ளைகளின் முகங்களில் வெளிப்பட்ட மகிழ்ச்சியைப் பார்க்கும்போது ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ‘கிச்சடி, பொங்கல், சாம்பார் சூப்பரா இருக்கு’ என்கிறார் மூன்றாம் வகுப்பு படிக்கும் ஹரிணி. ‘நீ என்னவாக ஆகப் போகிறாய்?’ என்று ருத்ராஸ்ரீ என்ற மாணவியிடம் முதலமைச்சர் கேட்டதும், ‘நான் உங்களைப் போல வருவேன்’ என்று அந்த மாணவி சொல்லி இருக்கிறார். ‘என்னை யாரென்று தெரிகிறதா?’ என்று முதலமைச்சர் கேட்டதும், ‘ஸ்டாலின் தாத்தா’ என்று ஒரு மாணவி சொல்கிறார். ‘தாத்தா, இல்ல ஸ்டாலின்தான்’ என்று முதலமைச்சர் சொல்லி சிரிக்கிறார். வாடிய வயிரைக் கண்ட போதெல்லாம் வாடி, அவர்கள் வாட்டம் போக்கியதும் ஏற்படும் மகிழ்ச்சி முதலமைச்சரின் முகத்தில் தெரிந்தது.**

“சந்தோஷமா இருந்துச்சு. தினந்தோறும் சாப்பிட மாட்டோம். ஆட்டோ சீக்கிரமா வந்துரும். அதனால சாப்பிடாம வந்திருவேன். சாப்பிடாம வந்தா வயிறு வலிக்கும். தண்ணீர் குடிச்சுக்குவேன். சி.எம்.என்னோட உட்கார்ந்து தான் சாப்பிட்டாங்க. ‘நீ என்னவா ஆகப் போற’ன்னு சி.எம். கேட்டாங்க. ‘நான் கலெக்டர் ஆவேன்’ என்று சொன்னேன். சி.எம். படத்தை டி.வி.யில, பேனர்ல பார்த்து இருக்கேன். அவரு எனக்கு ஊட்டி விடுவாரா என்று ஏங்கினேன்” என்று நான்காம் வகுப்பு மாணவியான கிறிஸ்டியார் கேத்ரின் அளித்துள்ள பேட்டி உருக்கமாக அமைந்துள்ளது.

**“நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்காக மிகமிக பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன் என்றால் காலை உணவுத் திட்டம் போன்ற திட்டத்துக்கு நான் காரணமாக அமைந்து இருக்கிறேன் என்பதால்தான்”** என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னதன் பொருள் இதுபோன்ற மாணவியரின் பேட்டிகளில் இருந்தே தெரிகிறது.

இது ஏழைகளுக்கான திட்டம் மட்டுமல்ல; இன்றைய சூழலுக்கான திட்டம் என்பதையும் முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். ‘பெற்றோர் இருவரும் காலையிலேயே வேலைக்குப் போகும் வீடுகள் அதிகமாகி விட்டன. அதையும் மனதில் வைத்து உருவாக்கிய திட்டம் இது’ என்று சொல்லி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். இதனை ஒரு மாணவியின் தாயான மீனா என்பவர், ‘தினத்தந்தி’ நாளிதழுக்கு அளித்த பேட்டியில் உறுதிப்படுத்தி இருக்கிறார். “நான் வேலைக்குச் செல்வதால் காலையில் சமைக்க முடியாது. சில நேரங்களில் குழந்தைகள் சாப்பிடாமல் பள்ளிக்குச் சென்றுவிடுகிறார்கள். காலை உணவுத் திட்டம் இப்போது தொடங்கப்பட்டுள்ளதால் எல்லோருடனும் சேர்ந்து சாப்பிடும் வாய்ப்பு அனைவருக்கும் உருவாகி உள்ளது” என்று சொல்லி இருக்கிறார் மீனா. காலை உணவு தயாரித்து தர நேரமில்லை என்ற குடும்பங்களுக்கும் சேர்த்து பயனளிக்கும் திட்டமாக இது அமைந்துவிட்டது.

**“காலைஉணவுத் திட்டத்துக்காக நிதி ஒதுக்கீடு செய்வதை நிதி ஒதுக்கீடு என்று சொல்ல மாட்டேன், நிதி முதலீடு ஆகும்’ என்று நான் குறிப்பிட்டேன். தமிழ்நாட்டு மாணவர்களின் அறிவுக்கு அரசாங்கம் செய்யும் முதலீடுதான் இந்த காலை உணவுத் திட்டம் ஆகும்”** என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னது அவரது தொலைநோக்கு எண்ணத்தைக் காட்டுகிறது. தமிழ்நாட்டு அறிவுச் சொத்தான மாணவ, மாணவியரின் எதிர்காலத்தை ஏற்றமிக்கதாக மாற்றுவது ஆகும்.

★ அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி - என்கிறார் வள்ளுவர்.

**வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும் என்கிறார் வள்ளுவர். இது அரசாங்கத்துக்கும் பொருந்தும் என்று நினைக்கக் கூடியவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். வள்ளுவர் வழியில்!**



தியாகிகள் தினத்தையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், தியாகிகளை நினைவு கூர்ந்திடும் வகையில் நேற்று (17.7.2024) சென்னை காந்தி மண்டப வளாகத்தில் தியாகிகள் மணிமண்டபம் முகப்பில் அமைந்துள்ள தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம், தியாகிசெண்பகராமன், தியாகி சங்கரலிங்கனார் ஆகியோர் திருவுருவச் சிலைகளுக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படங்களுக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் கு.செல்வபெருந்தகை, ஜே.எம்.எச். ஹசன் மௌலானா, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### அ.தி.மு.க.வின் தொடர் தோல்விகளை மறைக்கவே

# மக்களை ஏமாற்ற - பழனிச்சாமி தாம்பரத்தில் நடத்தும் வெத்துப் போராட்டம்!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆதாரங்களுடன் கடும் கண்டனம்!

**காஞ்சிபுரம், ஜூலை 18-**

**அ.தி.மு.க தொடர்ந்து பெற்று வரும் தொடர் தோல்விகளை மறைக்கவே, மக்களை ஏமாற்றி நீலிகண்ணீர் வடிப்பதற்காக, நாளை 19ஆம் தேதி தாம்பரத்தில் வெத்துப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளது கேலிக்குரியது என்றும், 3 ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியில் தாம்பரம் மாநகராட்சியாக உயர்த்தப்பட்ட பிறகு, மாநகராட்சியில் உள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி எண்ணில்லடங்கா மக்கள் நலப் பணிகள் நிறைவேற்றப்பட்டதை மார்தட்டி பெருமைப்படுகிறோம் என்றும், அதற்கான அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டி, எடப்பாடி நடத்துவது வெத்துப் போராட்டம்தான் என்று தா.மோ.அன்பரசன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை.

சென்னை பெருநகர மாநகராட்சியில் உள்ள மாநகர பகுதிகள் பெரும் வளர்ச்சி அடைந்ததைப் போல, சென்னை புறநகர் பகுதியில் உள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி அப்பகுதிகளையும் வளர்ச்சி அடைய செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கில், சென்னை புறநகர் பகுதியில் முன்பு இருந்த தாம்பரம் பல்லாவரம் - பம்மல் - அனகாபுத்தூர் செம்பாக்கம் ஆகிய 5 நகராட்சிகளையும் பெருங்களத்தூர் - பீர்க்கன்கரணை மாடம்பாக்கம் - சிட்லப்பாக்கம் - திருநீர்மலை ஆகிய 5 பேரூராட்சிகளையும் ஒன்றிணைத்து நாங்கள் நாளும் போற்றி வணங்கும், தமிழ்நாடு முதலமைச்சர் - நல்லாட்சி நாயகர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், 2021 ஆண்டு நவம்பர் 3ஆம் தேதி தாம்பரம் மாநகராட்சியாக உயர்த்தப்படும் என்ற நல்ல அறிவிப்பை வெளியிட்டார்.

சென்னை மாநகரத்திற்கு நுழைவு வாயிலாக இருக்கும் தாம்பரம் மாநகராட்சியில் கடந்த 3 ஆண்டு கால நல்லாட்சியில் மக்களுக்காக எண்ணற்ற பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மக்களிடமும் அவரது கட்சித் தொண்டர்களிடமும் செல்வாக்கை இழந்துள்ள அ.தி.மு.க பொதுச் செயலாளர் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தாம்பரம் மாநகராட்சி, செம்பாக்கம் மண்டலம் 3 க்குட்பட்ட சிட்லபாக்கம் - செம்பாக்கம் பகுதிகளில் மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றவில்லை என்ற பொய்யான தகவல்களை கூறி, தாம்பரம் மாநகராட்சி, சிட்லப்பாக்கத்தில் நாளை 19ஆம் தேதி ஒரு வெத்துப் போராட்டம் நடத்தப் போவதாக தம்பட்டம் அடித்து ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

எடப்பாடி வெளியிட்டுள்ள அறிக்கையில், அடுக்கடுக்கான பொய் மூட்டைகளை எடுத்து கூறி, மக்களை நம்ப வைக்க போராட்டம் என்ற பெயரில் நாடகம் நடத்துகிறார். மக்கள் யாரும் அவர் எடுத்து கூறும் பொய்யான குற்றச்சாட்டுக்களை நம்பமாட்டார்கள் என்பது நாட்டுக்கே தெரியும்.

### வளர்ச்சிப் பணிகள் ஏராளம்!

மக்கள் மனம் மகிழ்ந்து போற்றி பாராட்டும் வகையில், திராவிட மாடல் நல்லாட்சி நடத்தி வரும் எங்களுடைய ஒப்பாரும் மிக்காரும் இலா முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான நல்லாட்சியில், தாம்பரம் மாநகராட்சியில் கடந்த 2021ஆம் ஆண்டில் இருந்து நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் ஏராளம்!! ஏராளம்!!!. அதை பட்டியலிட பக்கங்கள் போதாது.

தாம்பரம் மாநகராட்சியில், 2 ஆண்டு கால ஈடில்லா ஆட்சியில் ரூ.110 கோடி மதிப்பீட்டில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. ரூ.55.81 கோடி மதிப்பீட்டில் 41,437 தெரு விளக்குகள் LED விளக்குகளாக மாற்றி அமைக்கப்பட்ள்டுளது.

விளங்கா அ.தி.மு.க ஆட்சியில், தாம்பரம் மாநகராட்சி பகுதியில் 30 நாட்கள் இடைவெளியில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு மக்கள் தத்தளித்து வந்தனர்.

2018ஆம் ஆண்டு, அ.தி.மு.க ஆட்சியில் தொடங்கப்பட்டு நிலுவையில் இருந்த அனகாபுத்தூர் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் கடந்த ஆண்டு முழுமையாக முடித்து தினசரி 35 லட்சம் குடிநீர் சென்னை பெருநகர குடிநீர் வாரியத்திடம் இருந்து பெறப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 4 மற்றும் மண்டலம் 5 இல் பாலாற்று குடிநீர் திட்டத்தின் கீழ் ரூ. 4 கோடியில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு 50 லட்சம் லிட்டர் குடிநீர் தினசரி கூடுதலாக பெறப்படுகிறது. மூவரசம்பட்டு - திரிசூலம் பகுதி கல்குவரிகளில் இருந்து தண்ணீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு 30 லட்சம் லிட்டர் தண்ணீர் பெறப்படுகிறது.

மக்கள் போற்றும் வகையில் மகத்தான ஆட்சியை நடத்தி வரும் மக்களின் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தின் தாம்பரம் மாநகராட்சிக்கு தினசரி 8 MLT குடிநீர் வழக் ஆணையிட்டதின் காரணமாகவும்,

### சீரான குடிநீர் வழங்கல்!

பாலாற்று குடிநீரோடு மேலே குறிப்பிட்டுள்ள திட்டங்களின் கீழ் குடிநீரையும் கூடுதலாக தண்ணீர் பெறப்பட்டதன் காரணமாகவும், தாம்பரம் மாநகாட்சியில் உள்ள மக்களுக்கு தற்போது 3 நாட்களுக்கு ஒரு முறை சீரான குடிநீரை வழங்கி, தவித்து வந்த மக்களின் தாகத்தை தீர்த்துள்ளார் நம் மக்கள் போற்றும் முதல்வர்.

கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க அலங்கோல ஆட்சியில், தாம்பரம் மாநகராட்சியில் அடங்கிய 10 உள்ளாட்சி அமைப்புகளில் குப்பை சேகரிக்கும் பணிகள் மிகவும் மோசமான நிலையில் கையாளப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக 5 பேரூராட்சிகளிலும் மனிதர்கள் கையால் இயக்கும் சைக்கிள் குப்பை வண்டிகள் பயன்படுத்தப்பட்டு வந்தன.



தற்போது அவைகள் எல்லாம் நிறுத்தி விட்டு, தாம்பரம் மாநகாட்சியில் தற்போது உள்ள 70 வார்டுகளில் அடங்கிய 2,65,830 வீடுகளில் சேரும் குப்பைகள் 800 வீடுகளுக்கு ஒரு பேட்டரி வாகனங்கள் மூலம் தினசரி சேகரிக்கப்பட்டு, மக்கும் குப்பைகள் மக்கா குப்பைகள் என தரம் பிரிக்கப்கப்பட்டு தற்போது தாம்பரம் மாநகரம் தூய்மையான மாநகரமாக பராமரிக்கப்பட்டு வருவதை மக்கள் நன்கு அறிவார்கள்.

### தாம்பரம் மாநகராட்சிக்கு 2010 கோடியில் திட்டம் தயாரிப்பு!

தாம்பரம் மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதள சாக்கடை திட்டத்தை செயலபடுத்திட ரூ. 2,010 கோடி மதிப்பீடில் புதிய திட்டம் தயாரிக்கப்படுள்ளது. இந்த திட்டப்பணிகளுக்கு அனுமதி பெறப்பட்டு விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது.

குறிப்பாக, எடப்பாடி பழனிச்சாமி வெத்துப் போராட்டம் நடத்துவதாக அறிவித்துள்ள, தாம்பரம் மாநகராட்சி - செம்பாக்கம் 3 வது மண்டலத்தில் அடங்கிய செம்பாக்கம் - சிட்லபாக்கம் பகுதிகள் மட்டும் அ.தி.மு.கவின் 10 ஆண்டு கால பாழாய்போன ஆட்சியில், அப்பகுதியில் உள்ள மக்களுக்கு எந்தவித அடிப்படை வசதிகளையும் செய்து தரவில்லை என்பதை அப்பகுதி மக்களே நன்கு அறிவார்கள்.

ஆனால் தற்போதைய திரவிட மால் நல்லாட்சியில், 3வது மண்டலத்தில் நடைபெறும்பணிகளை பட்டியலிடுகிறேன். சிட்லபாக்கம் ஏரி மேம்பாட்டு பணிகள் ரூ. 25 கோடி மதிப்பீட்டில் நீர் வளத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டது. சிட்லபாக்கம் ஏரியில் ரூ. 32 லட்சம் மதிப்பீடில் சிறுவர்கள் விளையாட்டு பூங்கா அமைக்கப்பட்டு, சிறுவர்களும் குழந்தைகளும் கொஞ்சி விளையாடி வருகிறார்கள்.

சிட்லபாக்கம் ஏரியில் கழிவுநீர் கலப்பதை தடுக்கும் வகையில் ரூ. 45 லட்சம் மதிப்பில் சேமிப்பு கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதி மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் வழங்குவதற்காக பாலாற்று குடிநீர் திட்டம் மூலம் 15 லட்சம் லிட்டர் குடிநீர் கூடுதலாக பெறப்பட்டு, கடந்த 5 மாதங்களாக இப்பகுதியில் உள்ள மக்களுக்கு 3 நாட்களுக்கு ஒரு முறை பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

முந்தைய அ.தி.மு.க ஆட்சியில் செம்பாக்கம் நகராட்சியாகவும், சிட்லபாக்கம் பேரூராட்சியாகவும் இருந்த காலத்தில் திடக்கழிவு மேம்பாட்டு திட்டம் சரிவர செயல்படாத காரணத்தால், சிட்லபாக்கம் - செம்பாக்ம் ஏரிகளில் திடக்கழிவுகளை கொட்டி குடிநீர் ஆதாரத்தை பாழ்படுத்தினார்கள்.

### திடக் கழிவுகள் சேகரிப்பு!

இந்த பகுதி தாம்பரம் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பிறகு, சிட்லபாக்கம் - செம்பாக்கம் பகுதியில் உள்ள 7 வார்டுகளிலும் நாள் ஒன்றுக்கு 42 டன் திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு குப்பை இல்லாத பகுதியாக காட்சி அளிக்கிறது.

2 ஆண்டு கால ஈடு இணையற்ற ஆட்சியில், இந்த மண்டலத்தில் மட்டும் ரூ. 9.32 கோடி மதிப்பீட்டில் 23 கிலோ மீட்டர் நீளத்திற்கு தார் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க ஆட்சி காலத்தில், அப்பகுதி மக்களுக்காக எந்தவித நன்மைகளையும் செய்து தராமல் அப்பபகுதி மக்களை எல்லாம் தவிக்கவிட்டதால்தானே, அப்பகுதி மக்கள் கடந்த 2021 சட்டமன்ற தேர்தல் மாநகராட்சி மன்ற தேர்தல்2024 நாடளுமன்ற தேர்தல் ஆகிய 3 தேர்தல்களிலும் அப்பகுதி மக்கள் தி.மு.க விற்கே வாக்களித்து மாபெரும் வெற்றியை தந்து அ.தி.மு.கவை புறந்தள்ளி விட்டனர்.

அ.தி.மு.க பெற்று வரும் இந்த தொடர் தோல்விகளை மக்களிடம் இருந்து மறைக்கவே தாம்பரம் மாநகராட்சி மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றவில்லை புளுகு மூட்டைகளை அள்ளி வீசி, மக்களுக்காக நீலிக்கண்ணீர் வடித்து கபட நாடகம் நடத்துகிறார் எடப்பாடி பழனிச்சாமி.

தமிழ்நாட்டு மக்கள் தெளிவாக உள்ளனர். தினம் தோறும் இந்த ஆட்சி மீது அடுக்கடுக்கான பொய்களை சுமத்தினாலும் மக்கள் ஒருபோதும் அதனை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் மனம் மகிழ்ந்து பாராட்டுகின்ற வகையில், மக்கள் போற்றும் மகத்தான ஆட்சியை நடத்திட வரும் நம்முடைய மக்களின் முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தான் மக்கள் தொடர்ந்து ஆதரவு தருவார்கள்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

### இராமேஸ்வரத்தில் மீனவர்கள் பிரச்சினையில்

# இலங்கை அரசைக் கண்டிக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## நாகை மாவட்டத்தில் இருந்து பெரும் அளவில் கலந்து கொள்வீர் - என்.கௌதமன் வேண்டுகோள்!

நாகை.ஜூலை 18-

நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என். கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழக கடலோர மாவட்ட மீனவர்களின் முக்கிய தொழில் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதாகும். மீனவர்களுக்கு மீன் பிடி தொழிலை தவிர வேறு தொழில் தெரியாது. இந்த மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடித்து வருவதால் மீனவர்கள் மட்டும் அல்லாமல் மீன் விற்பனையாளர், ஏற்றுமதியாளர்கள் மீன் பிடி தொழிலை சார்ந்த தொழிலாளர்கள் என லட்சக்கணக்கானவர்கள் வேலைவாய்ப்பு பெறுகின்றனர்.

மீனவர்கள் கடலுக்குத் தொலை தூரம் சென்று நாள் கணக்கில் கடலில் தங்கி மீன் பிடித்து வரும் நிலையில் அண்டை நாடான இலங்கை நாட்டின் கடற்படையினர் தமிழ்நாட்டு மீனவர்களை சிறை பிடிப்பதும், விசைப் படகை பறிமுதல் செய்வதும், மீனவர்களை கண்மூடித்தனமாக தாக்குவதும் தொடர்ந்து கொண்டே வருகிறது. இதனால் மீனவர்கள் கடலுக்கு அச்ச உணர்வுடன் மீன் பிடிக்க செல்கின்றனர்.

இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் ஒரு பக்கம் என்றால் கடற் கொள்ளையர்களின் தாக்குதலுக்கும் மீனவர்கள் ஆளாகின்றனர்.

நாகை, இராமநாதபுரம், புதுக்கோட்டை உள்ளிட்ட தமிழ்நாடு கடலோர மாவட்டங்களின் மீன்பிடி தொழில் செய்து வரும் விசைப்படகு மீனவர்கள் மற்றும் நாட்டுப் படகு மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கின்ற வகையில் மீன்பிடி தொழில் செய்து வரும் மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் இலங்கைக் கடற்படை தொடர்ந்து கைது செய்வதும், அவர்களுடைய விசைப்படகுகளையும், நாட்டுப்படகுகளையும் பறிமுதல் செய்வது போன்று தொடர்ந்து அத்துமீறி ஈடுபட்டுவரும் இலங்கை அரசை கண்டிக்காமல் தொடர்ந்து வேடிக்கைப் பார்த்தும், மீனவர்களை வஞ்சித்தும் பாராமுகத்துடன் செயல்பட்டு வரும் ஒன்றிய பாசிக பா.ஜ.க. அரசை கண்டித்து நாளை (19.7.2024 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு இராமேஸ்வரம் பேருந்து நிலையம் அருகில் நாகை முதல் இராமநாதபுரம் வரையில் உள்ள அனைத்து மீனவ சங்கங்கள் மற்றும் இராமநாதபுரம்,நாகை,புதுக்கோட்டை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் இணைந்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து மீனவர் கிராமங்களை சேர்ந்த மீனவர்கள், மீனவ கிராம பஞ்சாயத்தார்கள், மீனவ சங்கங்கள், கழக மீனவ அணியினர், நாகை மாவட்டக் கழகத்தை சேர்ந்த நிர்வாகிகள் பெரும் அளவில் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டதை வெற்றியடையச் செய்திட வேண்டும்

இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் கூறியுள்ளார்.